**ஊனமுற்றோருக்கான தேசிய மன்றம்** - 2017

---

ஊனமுற்றோருக்கான தேசிய மன்றத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, நிகர சொத்து மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க ஊனமுற்றவர்களது உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தின் 18(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை தலைவருக்கு 2018 யூலை 30 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தை 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) ஆம் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊனமுற்றோருக்கான தேசிய மன்றத்தின் 2017 டிசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 7,790,035 பற்றாக்குறை ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றக்குறை ரூபா 8,540,930 ஆவதால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிப்பெறுபேறுகளில் ரூபா 750,895 அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மன்றத்தின் மீளாய்வாண்டிற்கான மொத்த வருமானம் ரூபா 11,632,963 குறைவடைந்தபோதும், மனைகளுக்கான உதவிச் செலவினம் ரூபா 13,938,540 குறைவடைந்தமையே மேற்படி அதிகரிப்புக்கான காரணமாகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க ஊனமுற்றவர்களது உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட 22 நோக்கங்களில் பின்வரும் நோக்கங்களை ஈடேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

- (i) ஊனமுற்றவர்களின் பொருட்டு வழங்கப்படக் கூடிய சேவைகள் சம்பந்தமாக தவறில்லாத புள்ளி விபரங்களைப் பேணுதல்.
- (ii) ஊனத்திற்கான பிரதான காரணத்தை அறிதல் மற்றும் அவற்றைத் தவிர்ப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான ஆக்கபூர்வ நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.
- (iii) ஊனமுற்றவர்களுக்குத் தங்குமிட வசதிகளை வழங்கி கல்வி சார்ந்த மற்றும் தொழில்சார் பயிற்சிகளை வழங்குதல் மற்றும் அவர்களின் பொருட்டு புனர்வாழ்வு நிலையங்களை அமைத்து அவற்றை நிர்வகித்தல்.

**(ஆ) உதவியாக அமையும் உபகரணங்களை விநியோகித்தல்**

மீளாய்வாண்டினது செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 1,625,000 நிதியேற்பாடுடன் ஊனமுற்றவர்களுக்கு நடமாடும் சேவைகளின் மூலம் 2,500 மூக்குக் கண்ணாடிகளை விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின்போது ரூபா 456,300 பெறுமதியான 565 மூக்குக் கண்ணாடிகள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன.

**(இ) ஊனமுற்றவர்களுக்கு மனைகளுக்கான உதவியை வழங்குதல்**

தேசிய லொத்தர் சபையின் சுப்பிரி வாசனா சம்பத வருமானத்தின் 5 சதவீத வருமானத்துடன் அமுலாகிய குறைந்த வருமானம் பெறும் மனைகளற்ற ஊனமுற்றோருக்கு மனைகளை வழங்கும் உதவி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 60,000,000 நிதி ஏற்பாடுடன் 700 ஊனமுற்றோருக்கு மனைகளுக்கான உதவிகளை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின்போது 389 மனைகளுக்கான உதவியை பெறுவோருக்கு ரூபா 36,406,521 மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. அதிலும் 315 மனைகளுக்கான உதவியைப் பெற்றோருக்கு வழங்கப்பட்ட ரூபா 29,394,672 அவர்களுக்குரிய முன்னைய ஆண்டுகளுக்கான நிலுவைத் தவணைப் பணமாகும்.

(ii) 2007 முதல் 2015 வரை 19 மாவட்டங்களில் மனைகளுக்கான உதவியைப் பெற்ற 93 பேருக்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த உதவு தொகை ரூபா 15,803,000 ஆகும். அதில் முதல் தவணைப் பணமாக குறித்த ஆண்டுகளின்போது ரூபா 7,296,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தபோதும், போதியளவு நிதி கிடைக்கப் பெறாமை மற்றும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய மனைகளுக்கான உதவித் தவணைப் பணம் செலுத்தப்படாதிருக்கையில் புதிய மனைகளுக்கான உதவி கோருபவர்களை இனங்காணல் போன்ற காரணங்களால் மேலும் ரூபா 8,507,000 உதவி கோருபவர்களுக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டியேற்பட்டது. அதற்கமைய, 2 முதல் 10 ஆண்டுகள் வரையான கால தாமதம் 2017 டிசெம்பர் 31 அந் திகதியளவிலும் நிலவியமை அவதானிக்கப்பட்டது.

**(ஈ) வருமானத்தை ஈட்டுவதற்கான சுய வேலை வாய்ப்பு உதவிகளை வழங்குதல்**

ஊனமுற்றவர்களைக் கொண்டிருக்கும் குறைந்த வருமானத்தை ஈட்டும் குடும்பங்களின் பொருளாதார நிலைமையை இலகுவாக்குவதற்கு சுய வேலை வாய்ப்புகளை அதிகரித்தல் அல்லது ஆரம்பித்தல் போன்றவற்றிற்கு ரூபா 10,000 முதல் ரூபா 25,000 வரை 360 நபர்களுக்கு வழங்குவதற்கென ரூபா 10,000,000 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, 422 ஊனமுற்றோருக்கு ரூபா 9,987,610 வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்பார்வை செய்து செயல் முன்னேற்ற அறிக்கைகளை ஊனமுற்றோருக்கான தேசிய மன்றத்தின் செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு எழுத்து மூல அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தபோதும், 199 சுய வேலை வாய்ப்பாளர்களது செயல் முன்னேற்ற அறிக்கைகள் கணக்காய்வுத் தினமான 2018 யூலை 31 வரை வழங்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க ஊனமுற்றவர்களது உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், 2006 ஒக்டோபர் 17 ஆந் திகதிய 1467/15 ஆம் இலக்க மற்றும் 2009 செப்டெம்பர் 18 ஆந் திகதிய 1619/24 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்ட 2006 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஊனமுற்றோர்கள் தொடர்பான (பிரவேச) கட்டளையின் பிரகாரம் தற்போதுள்ள சகல பிரசித்த கட்டிடங்கள், பிரசித்த இடங்கள், பொது சேவைகளை வழங்கும் இடங்கள் என்பவற்றில் ஊனமுற்றோர் உட்பிரவேசிக்கக் கூடியவாறு நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியாகி ஏறக்குறைய 09 ஆண்டுகளாகியும் குறித்தவாறு நிர்மாண சேவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதைப் பரிசீலித்து அறிக்கை வழங்குவதற்கு ஊனமுற்றோருக்கான தேசிய மன்ற செயலகம் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

(ஆ) ஊனமுற்றோருக்கான தேசிய செயலகத்தால் மனைகளுக்கான உதவியை வழங்குவதற்கு ஆரம்பித்த 2007 முதல் 2017 வரை மாவட்ட ரீதியாக அல்லது பிரதேச செயலக ரீதியாக ஊனமுற்றோருக்குக் கொடுப்பனவு செய்த மனைகளுக்கான உதவிகளைக் குறிக்கும் கொடுப்பனவு செய்யப்பட்ட தவணைப் பண எண்ணிக்கை, கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தவணைப் பண எண்ணிக்கை, நிர்மாணிக்கப்பட்ட மனைகளது மொத்த எண்ணிக்கை போன்ற தகவல்களைப் பெறக்கூடிய தரவு முறைமை நாளதுவரையாக்கப்பட்டு இருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் 2,116 ஊனமுற்றோர் ஊனமுற்றோருக்கான தேசிய செயலகத்திடமிருந்து மனைகளுக்கான உதவி கோரி விண்ணப்பித்திருந்தபோதும், அவ்விண்ணப்பதாரர்களது விபரம் அடங்கிய பதிவேடு ஒன்றைப் பேணியிராததுடன், மனைகளுக்கான உதவியாக 03 தவணைப் பணத்தைக் கொடுப்பனவு செய்ததன் பின்னர் அது தொடர்பாகத் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மன்றம் 2017 ஆம் ஆண்டிற்கான பாதீட்டைத் தயாரித்திராததுடன், வரிசை அமைச்சின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கின் மூலம் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டை பயன்படுத்தியவாறிருந்தது. அதன் காரணமாக, பாதீட்டை ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்துவதில் மன்றம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன், மனைகளுக்கு உதவி வழங்குதலில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.